2022 மார்ச் 21]

விழாவிற்கு மாலை அணிவிக்கிறபோது மட்டும்தான் திறக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுவதால், அது சிதிலமடைந்துவிடுகிறது. எனவே, அரங்கம் அமைப்பது குறித்து எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் இருந்தபொழுதுதான் நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர்களானாலும்சரி, தமிழ்க் காவலர்களாக இருந்தாலும்சரி, நம்முடைய மகத்தான பெரியவர்களுக்கெல்லாம் திருவுருவச் சிலை அமைத்தும், அரங்கம் அமைத்தும், மரியாதை செலுத்தப்பட்டதிலே முன்னணி மாநிலமாகத் தமிழகம் எப்போதும் விளங்கியது என்பதைக் கடந்த கால வரலாறு தெரிவித்திருக்கிறது. அதேபோல, அவருடைய வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதற்கென தாராளமாக நிதியை ஒதுக்கி தேவைப்படுகிற இடத்திலே, தேவையான வகையிலே அதையெல்லாம் செய்து கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், படிப்படியாக நிதிநிலைக்கேற்ப நிச்சயமாக அதுகுறித்துப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. அறிவிப்பு

மாநில நூலகக் குழு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டப்படியாக அமைக்கப்பட்ட மாநில நூலகக் குழு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு தலா 3 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட அமைப்புகளில், மாநில நூலகக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின்*

பதவிக்காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலமாகும். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 16–வது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களாகத் தொடரும் வரை அலுவல் வழி உறுப்பினர்களாகப் பதவி வகிப்பர். தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்புத்தாளினை 22–3–2022 பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத்தாள்கள் அன்றைய தினம் பிற்பகல் 5–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 23–3–2022 பிற்பகல் 3–00 மணிக்குள் தங்களது வேட்புத்தாளினைத் திரும்பப் பெறலாம்.

முற்பகல் 11–00

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அவ்வமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்புத்தாள்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், இந்த அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, தேர்தல் நடைபெறும்.

தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,